www.padippakam.com



அம்பதீர்த்தம் என்றவிடத்தில் அமைந்திருந்த எல்லாளனின் படையரணை, நான்கு மாதங்கள் முற்றுகையிட்டு துட்டகாமினியால் வெற்றி கொள்ள முடியவில்லை. அம்பதீர்த்தத்தின் படைத்தளபதி தித்தம்பன் பெண் விடயத்தில் மிகவும் பலவீனமானவன். அப்பலவீனத்தை துட்டகாமினி தனது வெற்றிக்குப் பயன்படுத்திக் கொண்டான். தனது தாய் விகாரமகாதேவியைத் தித்தம்பனின் முன் பார்வைக்கு நிறுத்தினான் என மகாவம்சம் கூறுகிறது. மகாவம்சம் கூறுகின்ற இந்த சந்தேகக் குறிப்பிலிருந்து சரியான அனுமானத்தைப் பெறுவது கடினமெனவும் எனினும் திக்கா நூலின்படி எதிரியுடனான தாயின் திருமணத்திற்கு அரசியல் லாபம் கருதிய துட்டகாமினியின் சம்மதம் இருந்தது என மகாவம்சத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பாளரான கெய்கர் அந்நூலின் அடிக்குறிப்பில் குறித்துள்ளார்.

நான்கு மாதங்களாகியும் கோட்டையைக் கைப்பற்ற முடியாது போன துட்டகாமினி, தமிழ்ப்படைத் தளபதியின் பெண் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டானெனவும் துட்டகாமினி விரித்த பொறியில் தமிழ்ப்படைத் தளபதியை வீழ்த்துவதற்கு அவனின் தாய் விகாரை மகாதேவியே விரும்பி முன்வந்தாளெனக் குறித்துள்ளார். அம்பதீர்த்தத்தைக் கைப்பற்றிய பின்னர் , சர்ப்பக் கோட்டை என்ற படையரணைத் துட்டகாமினி வெற்றி கொண்டான். இங்கு அகப்பட்ட ஏராளமான செல்வங்கள் படைவீரர்களிடையே பங்கீடு செய்யப்பட்டன. மகாவலி கங்கையின் வலது கரையோரமாக முன்னேறிய சிங்களப்படை தமிழரின் பல அரண்களைத் தகர்த்து வெற்றி கொண்டு விஜிதபுரத்(பொலநறுவை) தைச் சென்றடைந்தது. எல்லாளனின் விஜிதபுர கோட்டை மிகவும் பலம் வாய்ந்தது. உயர்ந்த மதில்களையும் காவற் கோபுரங்களையும் கொண்டது. அகழிகளினால்

மாதங்கள் எடுத்தன. அதனையடுத்து அனுராதபுரத்தை நோக்கி முன்னேறிய சிங்களப்படைகள் கிரிலகம், மகிளநகரம் என்னுமிடங்களில் எல்லாளனது படை எதிர்கொண்டு தாக்கித் தோல்வியடைந்தது. துட்டகாமினி அதன் பின்னர் காசபர்வதம் என்னுமிடத்தில் பாசறை அமைத்து ஓய்வெடுத்துக் கொண்டான். உருகுணையிலிருந்து படை புறப்பட்டு ஒரு ஆண்டுக்கு மேலாகியிருந்தது. படையினருக்கு பலத்த அழிவுகள் ஏற்பட்டிருந்தமையால் வீரர்களுக்கு ஆறுதலளிக்க வேண்டி காசபர்வதத்தில் பாசறை அமைத்துத் தங்கினான். உருகுணையிலிருந்து ஆளணியைப் பெறவும் உணவுப் பொருட்களைப் பெறவும் இந்த ஓய்வு தேவைப்பட்டது என்பர். அனுராதபுரத்திலிருந்து தென்கிழக்கே பதினெட்டு மைல்கள் தூரத்தில் காசபர்வதம் அமைந்திருந்தது. எல்லாளனின் பிரதான படைத்தளபதிகளும் வீரர்களும் சிங்களப்படையை

ஆலோசனை நடத்தினான். தானே எஞ்சியுள்ள தமிழர் படையை நடாத்திச்செல்வதென எல்லாளன் முடிவு செய்தான். அவ்வேளை துட்டகாமினியிடமிருந்து ஓர் அறைகூவல் தூதுவன் மூலம் விடுக்கப்பட்டது. எல்லாளனைத் தனிச்சமருக்கு துட்டகாமினி அழைத்தான். அந்தச் சவாலை எல்லாளன் ஏற்றதன் மூலம் பெருந்தவறு செய்தான். எல்லாளன் 72 வயதுடைய முதுமை எய்தியவன். துட்டகாமினியோ இளைஞன் . துட்டகாமினி தனிச்சமருக்கு அழைத்தமைக்கும் அதனை எல்லாளன் ஏற்றமைக்கும் பல காரணங்கள் இருக்கலாம். உருகுணையிலிருந்து புறப்பட்ட சிங்களப்படை மகியங்கணையிலிருந்து காசபர்வதம் வரை ஒரு ஆண்டிற்கு மேலாக யுத்தம் செய்து இழப்பையும் களைப்பையும் அடைந்திருந்தது. அதேபோலவே தமிழர்படையின் நிலையும் இருந்தது. பெரும் அழிவின் இறுதியில் அனுராதபுரம் சிங்களப்படையால் முற்றுகையிடப்பட்டிருந்தது.

வெற்றிக்கனி எவருக்கு கிட்டும் என தெரியாத நிலையில் இரு மன்னர்களும் தனிச்சமருக்கு ஒப்புக் கொண்டனர் என ஊகிக்கலாம். எல்லாளன் ஆயுதபாணியாகத் தனது மகாபர்வதம் என்ற யானையிலேறி அனுராதபுரநகரின் தெற்கு வாயிலையடைந்தான். துட்டகாமினி தனது கண்டுலன் என்ற யானையிலேறி அவனை எதிர்கொண்டான்.

துட்டகாமினி எழுப்புவித்தான். இச்சைத்தியத்திக்கும் கடக்கும் பவணிகள் வாத்திய ஒலியை நிறுத்திச் செல்லவேண்டும் என அவனால் இயற்றப்பட்ட கட்டளை நெடுங்காலம் பின்பற்றப்பட்டது. 'எந்த மனிதனாயினும் அவன் இளவரசனாக இருந்தாலும் சரி, சாதாரண குடிமகனாக இருந்தாலும் சரி இந்த வழியாகச் சிவிகையிலோ மூடு பல்லக்கிலோ வர நேர்ந்தால் வாத்தியவொலி எழுப்பக்கூடாது' என ஒரு தூணில் பொறித்து வைத்தான். அதற்கிணங்க யானைகள் மீது சென்றவர்கள் இந்த இடத்தில் இறங்கி நடந்தனர். மேள வாத்தியங்களுடன் ஊர்லஞ் சென்றவர்கள் இந்த ஞாபகச் சின்னத்தைக் கடக்கையில் வாத்தியங்களை நிறுத்தி மரியாதை செலுத்திச் சென்றனர். துட்டகாமினி அனுராதபுரத்தில் மூடி சூடிக்கொண்டான். அவன் சிம்மாசனம் ஏறுவதற்கு முன் இலங்கையின் பலபகுதிகளிலும் ஆட்சி செய்த முப்பத்திரண்டு தமிழ்க் குறுநில மன்னர்களை வெற்றி கொள்ள நேர்ந்தது. எல்லாளன் இறந்மையைக்

# ஈழத்தவர் வரலாறு


8

## கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ஆம் ஆண்டு வரை....

கேள்விப்பட்ட அவனது மருமகன் பாலுகன் என்பான் 6000 படைவீரர்களுடன் அனுராதபுரத்தைத் தாக்கினான் என்றும் அப்படை தோல்வியடைந்தது என்றும் மகாவம்சம் கூறுகின்றது. எல்லாளன் மரணமான ஏழாம் நாள் பாலுகன் அனுராதபுரத்தைத் தாக்கியதாகக் குறிப்புள்ளது. எனவே உத்தரதேசத்திலிருந்து (பூநகரி) பாலுகன் படையெடுத்து வந்திருக்கவேண்டும் எனத் துணியலாம்.

'இலங்கை வரலாறு' என்ற நூலின் மூன்றாம்

சூழப்பட்டிருந்தது.




அத்தியாயத்தை எழுதிய வரலாற்றறிஞர் பரணவிதான,

விஜிதபுரத்தைக் கைப்பற்றுவதற்கு சிங்களப் படைக்கு நான்கு

எதிர்கொள்ளத் தயாராகவிருந்தனர். காசபர்வதப் பாசறையைத் தமிழர்படை தீகஜந்து என்ற தளபதியின் தலைமையில் தாக்கியது. துட்டகாமினி போல வேடமணிந்த பல உருவங்கள் ஆங்காங்கு போரிட்டன. அதனால் அந்தப் போர்முனையில் உண்மையான துட்டகாமினியை அடையாளம் காண முடியவில்லை. தமிழ்த்தளபதி தீகஜந்து உண்மையான துட்டகாமினியை அடையாளமி கண்டு அவனை ஆவேசத்தோடு

இருவருக்கும் கடுஞ்சமர் மூண்டது. ஆயுத யுத்தத்தில் எல்லாளனின் பலமோங்கியிருந்தமையால் துட்டகாமினி தனது யானையைத் தூண்டி எல்லாளனின் யானையைத் தாக்கினான். கண்டுலன் தனது வலிமையான தந்தங்களால் மகாபர்வதத்தை தாக்கியது. மகாபர்வதம் சரிந்தபோது துட்டகாமினி வீசியவேல் எல்லாளனைத் தாக்கியது. தமிழ் மாமன்னன் நிலத்தில் சரிந்து வீழ்ந்தான். தனது தனிப்பட்ட வீரம், வெற்றி என்பனவற்றுடன் தமிழ்

**-செங்கை ஆழியான்-**

நெருங்கிய வேளை, இடையில் புகுந்த சிங்களத் தளபதி சூரநிமலனால் கொல்லப்பட்டான். தீகஜந்துவின் மரணத்துடன் தமிழர் படை தோல்வியைத் தழுவிப் பின் வாங்கியது. சிங்களப்படைகள் அனுராதபுரத்தை நோக்கி முன்னேறின. அனுராதபுரம் முற்றுகையிடப்பட்டது. எல்லாளன் தனது அமைச்சரவையைக் கூட்டி

ஈழக்குடிமக்களின் வீரம், வெற்றி , நல்வாழ்வு என்பனவற்றைத் தொடர்புபடுத்தியமையினால் எல்லாளனின் தனிச்சமர் தமிழ் ஈழமக்களின் தோல்வியாயிற்று. தமிழரசு தோல்வியுற அனுராதபுரத்தில் சிங்கள அரசு எழுந்தது. எல்லாளனின் உடல் உரிய மரியாதைகளுடன் தகனம் செய்யப்பட்டது. அத்துடன் அவன் வீழ்ந்திறந்த இடத்தில் நினைவுச் சின்னமாகச் சைத்தியம் ஒன்றை

துட்டகாமினி இலங்கையின் மாமன்னனாக முடிபுனைந்த பின்னர் பௌத்த தேரர்களிடம் தனது மனத்துயரை வெளியிட்டான். 'ஆயிரக்கணக்கானவர்களை எனது வாளுக்கு இரையாக்கியுள்ளேன். என்மனத்தில் அமைதியில்லை. என வினவுகிறான். பௌத்தத்தை நம்பாதவர்கள் , பைசாச வாழ்க்கையை அனுஷ்டிப்பவர்கள். விலங்குகளுக்கு சமமாகக் கருதப்பட்டவேண்டியவர்கள் எனச் சங்கத்தினர் கூறினார்கள். பரண விதான தனது கட்டுரையில் இதனை 'துட்டகாமினியால் யுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள் (தமிழர்கள்) பௌத்தத்தில் நம்பிக்கையில்லாதவர்கள், பாவம் செய்தவர்கள். விலங்குகளிலும் மேலானவர்களல்லர். இவர்களைக் கொன்றதால் பாவம் சேராது என விளக்குகிறார்.

(தொடரும்)

நவீன டிசைன்களில் அசல் 22 கரட் தங்க நகைகள். பட்டுப் புடவைகள். கூறைச் சேலைகள். பட்டு வேட்டிகள்.
ஆடவர். நங்கையர். குழந்தைகளுக்கான ரெடிமேட் உடுப்புக்கள். எவர்சில்வர் பொருட்கள். ஓடியோ—வீடியோ—சிடி.. வார—மாத பத்திரிகைகள். சஞ்சிகைகள்.
மளிகை—மரக்கறி—கடலுணவு வகைகள்.
அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
ஆதவா ஆசியா சென்ரர்
TAUNUS Str.19
60329 FRANKFURT/ MAIN
TeL: 069/ 250361-2
Fax: 069/ 234045
ADAVAA ASIYA CENTAR

படிப்பகம்